DECEMBER 2024 **U/ID 33221/UCT5A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. நற்றிணை குறிப்பு வரைக.

2. இரவுக்குறி என்றால் என்ன?

3. நற்றிணைத் தோழி தலைவியைக் கையடைப்படுத்தியமையை எழுதுக.

4. குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப்பாடலைப் பாடியர் யார்?

5. நிலத்தினும் பெரிது வானினும் உயர்ந்தது எது? யார் கூற்று?

6. குறுந்தொகையில் தோழி செலவுணர்த்திய பாங்கினை விளக்குக.

7. முல்லைக்குரிய நிலம் யாது?

8. முல்லைக்குரிய பெரும்பொழுது சிறுபொழுதுகளை எழுதுக.

9. முல்லைப்பாட்டு எத்தனை அடிகளைக் கொண்டது?

10. ‘நிமிர்ந்த மாஅல் போல’– உவமைப்பொருளை எழுதுக.

11. செலவழுங்குவித்தல் என்றால் என்ன?

12. காவிரி கடலில் கலக்கும் இடம் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. நற்றிணைத் தலைவியின் வேறுபாட்டிற்கான காரணத்தை ஆராய்க.

14. பரத்தமை ஒழுக்கம் கொண்ட தலைவனுக்குத் தலைவி கூற்றை விவரிக்க.

15. குறுந்தொகையில் இடைச்சுரத்து நிகழ்ந்த நிகழ்வை விவரிக்க.

16. குறுந்தொகைத் தோழி இரவுக்குறியின் போது தலைவனிடம் மொழிந்தவற்றை விவரி.

17. தலைமக்களின் உரையாடல் கருத்துக்களை முல்லைக்கலி வழி புலப்படுத்துக.

18. முல்லைப்பாட்டின் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. சோழநாட்டின் வளத்தினைப் பட்டினப்பாலை வழி புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. நற்றிணைத் தலைவன் செலவு தவிர்த்ததின் காரணத்தை ஆராய்க.

21. குறுந்தொகையில் மடலேறுதல் பற்றிய செய்திகளை விவரிக்க.

22. தமிழரின் வீரப்பண்பை முல்லைக்கலி வழி புலப்படுத்துக.

23. முல்லைப்பாட்டில் அகப்புறச் செய்திகளைக் கட்டுரைக்க.

24. பட்டினப்பாலையின் இயற்கைக் காட்சிகளைப் புலப்படுத்துக.

———————